பத்திரிகையில் வந்த செய்தி இருக்கிறது. எங்கோ ரசாயன உர கம்பெனியிலிருந்து வெளியேறுகிற கழிவுப் பொருள்கள் ஆற்றுத் தண்ணீரில் கலந்து அதைப் பயன்படுத்தியவர்களுக்கு நோய் உண்டாக்கியிருக்கிறது என்ற செய்தியை அமைச்சர் அவர்களும் படித்திருப்பார்கள். அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஏற்கனவே மே திங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுக்கப்பட்ட சிகிச்சை பற்றியும் மேலும் விரைவில் நோய் பரவாமல் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றித்தான் தகவல் இருக்கிறது. மேலும் மேலும் இதைப்போன்ற சுகாதாரக் கேடுகள் நடந்திருந்தால் அதைப் பரிசீலனை செய்து வேறு முறையில் அதுபற்றி பதில் அளிக்க தயாராக இருக்கிறேன்.

திரு ஜி. சுவாமிநாதன்: மஞ்சள்காமாலை நோய் ஆகஸ்டு மாதம் சென்னை மாநிலம் முழுவதும் பரவியிருந்தது என்பது உண்மை. அதை ஆங்கில மருந்துகளால் குணப்படுத்த முடியவில்லை என்றும் தமிழ் மருந்துகள் மூலம் அதாவது கையாந்தகரை என்ற இலைதான் சரியான மருந்து என்றும் சொல்கிறார்கள். அரசாங்கத்திற்கு அது தெரியுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: அதற்கான தகவல் இல்லை.

திரு. எம். எத்திராஜுலு: மஞ்சள்காமாலை வியாதி தமிழ்நாடு முழுவதும் பரவியிருக்கிறது. ஆங்கில மருந்துகள் மூலம் அதை சீக்கிரமாக குணப்படுத்தமுடியவில்லை என்று சொல்கிறார்கள். சித்த வைத்தியப்படி சீக்கிரம் குணப்படுத்த முடியும் என்பதோடு நாட்டில் கிடைக்கக்கூடிய மூலிகைகளைக் கொண்டு குணப்படுத்தலாம் என்ற நிலையிருக்கிறது. ஆதலால் ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் சித்தவைத்தியப் பிரிவு வைத்து இதுபோன்ற வியாதிகளைக் குணப்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: சித்த வைத்தியத்திற்கு அரசாங்கம் நல்ல வாய்ப்பு அளிக்கவேண்டுமென்ற முயற்சியில்தான் திருச்சி போன்ற நகரங்களில் அந்தப் பிரிவு வைக்கப்பட்டு நடைபெறுகிறது. குறிப்பிட்ட வியாதிக்கு சித்தவைத்திய சிகிச்சை குறித்து பரிசீலித்து அதன்பிறகுதான் சொல்லமுடியும்.

Physical Education Teachers of V. S. Boys' High School, Tiruvarur

* 31 *Q.*—THIRU G. KRISHNAMOORTHY: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether notices of termination of services have been served on permanent Physical Education Teachers by the management of V. S. Boys' High School, Tiruvarur, Thanjavur district;

24th February 1969]

(*b*) whether the reduction in the number of periods for physical education has been quoted in the notices as reason for such termination; and

(*c*) if so, the relief proposed by the Government in the matter?

மாண்புமிகு திரு எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை. ஏனெனில் வழங்கப்பட்ட வேலை நீக்க அறிவிப்புகள் திரும்பப் பெறப்பட்டன.

Periyar Waters

* 32 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) when an agreement was signed between the Governments of Tamil Nadu and Kerala in connection with the Periyar water which enriches Madurai district;

(*b*) whether any new agreement was signed for electricity; and

(*c*) the duration of the agreement and annual payment to the Government of Kerala therefor?

பெரியாறு தண்ணீர்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டத்தைை வளப்படுத்தும் பெரியாறு தண்ணீர் சம்பந்தமாக தமிழக சர்க்காருக்கும், கேரள சர்க்காருக்கும் எப்பொழுது ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது ?

(இ) மின்சாரத்திற்காக மீண்டும் புது ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதா ?

(உ) எத்தனை ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செல்லும் ? கேரளாவுக்கு இதற்காக நாம் கொடுக்கும் பணம் ஆண்டுக்கு எவ்வளவு?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக்பாஷா : (அ) தமிழ்நாடு அரசாங்கத்துக்கும் முன்பிருந்த திருவாங்கூர் அரசாங்கத்துக்கும் இடையே பெரியாறு எரி குறித்த ஒப்பந்தம் 29—10—1886-ல் செய்து கொள்ளப்பட்டு 1—1—1886 முதல் செயலாக்கப்பட்டது.

(இ) மின்சார உற்பத்திக்கும் பெரியாறு நீரைப் பயன் படுத்த 1949, ஜுன் திங்களில் ஒப்பந்தம் ஏற்பட்டது; இந்த ஒப்பந்தத்தையொட்டி, பெரியாறு, நீர் மின்சாரத்திட்டத்திற்கு 1954, நவம்பரில் அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. இத்திட்டம் முடிவுற்று மின்சார உற்பத்தி பணி 12—10—1958 முதல் தொடங்கப் பட்டது.